அனுப்புதல்

**மு.க. ஸ்டாலின் அவர்கள்,**
சட்டமன்ற உறுப்பினர்,
தி.மு.க பொருளாளர்,
**சென்னை.**

பெறுதல்

**திரு. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,**
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
**திருவாரூர்.**

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருவாரூர் 27 OCT 2014

பொருள்:

திருவாரூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட பகுதியில் அத்தியவாசிய பணிகளையும், நலத்திட்டங்களையும் புறக்கனிக்காமல் நிறைவேற்றி தர கோரிக்கை மனு.

////

திரு. மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு

**வணக்கம்,**

தி.மு.க தலைவரும், திருவாரூர் சட்டமனற உறுப்பினர் டாக்டர். கலைஞர் அவர்களின் சார்பாக நான் இந்த கோரிக்கை மனுவை அளிக்கிறேன்.

1. கமலாய திருக்குளம் மேல்கரை, வடகரை இரண்டு மதில் சுவர் இடிந்து விழுந்த நிலையில் மற்ற இரண்டு பக்க மதில் சுற்று சுவர்களும் இடியும் தருவாயில் உள்ள காரணத்தினால் சுற்றுச்சுவர் சீர் செய்யும் பணியினை உடனடியாக செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

2. விவசாயிகளின் குறுவை நெல் அறுவடை செய்ய முடியாமல், மழை நீரில் நெல் மூழ்கி முளைத்த காரணத்தினால், பாதித்த விலசாயிகளுக்கு நிவாரணம் தர கேட்டுக் கொள்கிறேன்.

3. விவசாயிகளின் சம்பா, தாளடி நடவு நட்ட பயிர்கள் மழை நீரில் மூழ்கி அழிகியும் காரணங்ததினால் பாதித்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

4. ஆறுகள், வாய்க்கால்கள்,தூர்வாராத காரணத்தினால் மழைநீர் வடியாமல் பயிர்கள் நாசமடைவதால் பாசன, வடிகால் வாய்க்கால்களை தூர் வாறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

5. அனைத்து சாலைகளும் குன்டும், குழியுமாக மழைநீர் தேங்கி போக்குவரத்து வாகனங்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக இருப்பதால் சாலைகளை சரி செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

6. மழைநீர் தேங்கி உள்ள காரணத்தினால் தொற்று நோய் பரவ அபாயம் உள்ளது அதை சரி செய்யவும். முன் எச்சரிக்கை நடவடிக்கையாக நோய் பரவாமல் தடுக்க மருத்துவ வசதி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி அனைத்து அத்தியவாசிய பணிகளையும், நிவாரணங்களையும் திருவாரூர் சட்டமன்ற தொகுதி மக்களை புறக்கனிக்காமல் உடனடியாக செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

27/10/2014

Copy Received